3

# மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வின் உறுதிப்பாடு

*"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரி. 15:20).*

மரணத்திற்குப் பின்பு நடைபெறுகின்றவற்றைச் செயல்விளக்கப்படுத்த இயலாது. சிலர் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டிருப்பினும் (வரைவட்டவணையைக் காணவும்), இந்த வாழ்வுக்கு வெளியே அவர்களின் அனுபவம் தொடர்பான தகவல் எதையும் நாம் கொண்டிருப்ப தில்லை.

நம்மில் பெரும்பாலானவர்கள் தொடர்ந்து வாழ்வதற்கு விரும்புகின் றோம். சாலொமோன், "அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார், உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார், ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும், செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" என்று கூறினார் (பிர. 3:11). நம்மில் பலர் மரணத்திற்குப் பின்பு நமக்கு அன்பானவர்களைக் காண்போம் என்று நம்பிக்கையாய் இருக்கின்றோம். நாம் கல்லறைக்கு அப்பால் உள்ள வாழ்வை நம்பி எதிர்பார்த்திருக்கின்றோம். மரணம் என்பது மூடப்பட்ட கதவாயிருக்க வேண்டும் என்று நாம் விரும்புவதில்லை; எதிர்கால இருப்பினுள் கடந்து செல்லும் ஒரு வழியை நாம் விரும்புகின்றோம்.

தத்துவ ஞானிகள், மரணத்திற்குப் பின்பு ஒரு வாழ்வு உண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றதாக அல்லது மறுத்துரைக்கின்றதாகத் தாங்கள் நம்புகின்ற கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவர்களின் முடிவுகளைத் தர்க்கவியல் மாத்திரமே சரிபார்த்துவிட முடியாது. நியாயமானதாகக் காணப்படுவது உண்மையற்றதாக இருக்கலாம்.

யோபு கேட்ட, "மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?" (யோபு 14:14) என்ற கேள்விக்கு தெய்வீக வெளிப்படுத்துதலினால் மாத்திரமே பதில் அளிக்கப்படக்கூடும். தத்துவமும் தர்க்கவியலும், மரணத்திற்குப் பிந்திய வாழ்வு பற்றிய அனுபவப் பூர்வமான நிரூபணத்தையோ அல்லது கேள்வி கேட்க இயலாத உறுதிப்பாட்டையோ முன்வைக்க இயலாது. தவறற்ற வெளிப்படுத்துதல் மாத்திரமே அதைச் செய்ய முடியும். கல்லறைக்கு அப்பால் உள்ள வாழ்வின்மீதான விசுவாசத்திற்கான அஸ்திபாரம், வெளிப்படுத்துதலின்மேல் அது கட்டப்பட்ட அஸ்திபாரத்தைப் போன்று

*தான் திடமாக இருக்க முடியும். நாம் தவறற்ற வெளிப்படுத்துதல் எதையும் கொண்டிருக்கவில்லையென்றால், பின்புள்ள வாழ்வு பற்றிய நிச்சயமான உறுதிப்பாடு எதையும் நாம் கொண்டிருப்பதில்லை.*

## *பழைய ஏற்பாட்டில் இருந்து உறுதிப்பாடு*

*நித்திய வாழ்வின் இயல்பு என்பது பழைய ஏற்பாட்டில் பிரதானமான அக்கறைக்குரிய விஷயமாக இருந்ததில்லை என்றாலும், அது மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வு பற்றிய குறிப்புகளைத் தருகிறது. இஸ்ரவேல் மக்கள், தாங்கள் மீண்டும் வாழ்வது பற்றிய ஆதாரத்திற்குத் தங்கள் வேத வசனங்களைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தார்கள்.*

*மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வு பற்றிப் போதிக்கும் வசனப் பகுதிகளில் சில என்று அவர்கள் பின்வரும் பகுதிகளைப் புரிந்து கொண்டனர்:*

> *உபா. 32:39 - "நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்."*
>
> *சங். 17:15 - "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன், நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்."*
>
> *பிர. 12:7 - "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் (போகிறது)."*
>
> *ஏசாயா 26:19 - "மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னு டையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள், மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள், உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும், மரித்தோரைப் பூ புறப்படப்பண்ணும்."*

*இந்தக் கூற்றுக்கள் மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வைக் குறிப் பிடலாம், ஆனால் இவைகள் மீண்டும் வாழ்பவர்கள் எப்படி இருப்பார்கள் அல்லது அவர்கள் வாழவிருக்கும் வட்டாரத்தின் இயல்பு என்ன என்பதைப் பற்றி எதையும் வெளிப்படுத்துவதில்லை. இவ்விரண்டைப் பற்றியும் மிகவும் அதிகமான தகவலைப் புதிய ஏற்பாடு தருகிறது.*

*பழைய ஏற்பாட்டின் மற்ற வசனப் பகுதிகள், நாம் மீண்டும் வாழ் வோம் என்று போதிக்கலாம். ஆபிரகாமிடத்தில் தேவன், "நீ சமாதானத் தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய். நல்ல முதிர்வயதிலே அடக்கம் பண்ணப்படுவாய்" என்று கூறினார் (ஆதி. 15:15; 25:8; 35:29; 49:33ஐயும் காணவும்). "உன் பிதாக்களிடத்தில் சேருவாய்" என்ற சொற்றொடர், ஆபிரகாமின் பிதாக்கள் இன்னமும் இருந்தனர் என்று அர்த்தப்படலாம், ஆனால் அவர்கள் இன்னொரு வட்டாரத்தில் இருந்தனர். அவர்கள் இல்லையென்றால் அவர்களிடத்திற்கு அவர் எப்படிப் போகமுடியும்?*

*மரித்தவர்களின் நிலை பற்றி யோபு பின்வருமாறு பேசினார்:*

*துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது.*
*பெலனற்று விடாய்த்துப் போனவர்கள் அங்கே*
*இளைப்பாறுகிறார்கள்.*
*கட்டுண்டிருந்தவர்கள் அங்கே ஏகமாக அமைந்திருக்கிறார்கள்.*
*ஒடுக்குகிறவனுடைய சத்தம் அங்கே கேட்கப்படுகிறதில்லை.*
*சிறியவனும் பெரியவனும் அங்கே சரியாயிருக்கிறார்கள்.*
*அடிமை தன் எஜமானுக்கு நீங்கலாயிருக்கிறான் (யோபு 3:17-19).*

*அவர் பின்வருமாறு கூறி, மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வைப் பற்றிக் குறிப்புரைத்தார்:*

*இந்த என் தோல்முதலானவை அழுகிப் போனபின்பு,*
*நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்.*
*அவரை நானே பார்ப்பேன்.*
*அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்.*
*(யோபு 19:26, 27).*

*தாவீது தனது பிள்ளைக்காகத் துக்கித்தபோது, தான் அவனிருக்கும் இடத்திற்குச் செல்ல முடியும் என்ற சிந்தனையில் ஆறுதலைக் கண்டார் (2 சாமு. 12:23). இது, மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வில் தாவீது விசுவாசம் கொண்டிருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவருடைய மகன் இன்னும் இருக்கவில்லையென்றால், அவனுடன் சென்றிருத்தல் பற்றி அவர் எப்படி எதிர்பார்க்க முடியும்? பாதாளத்தில் விடப்படாத ஆத்துமாவைக் கொண்ட ஒருவர் பற்றித் தாவீது தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (சங். 16:10). இவ்வசனப்பகுதி அப். 2:25-28ல் இயேசுவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது.*

*தானியேல், “பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்” என்று எழுதினார் (தானி. 12:2).*

*இவ்வசனப் பகுதிகள், நமது இருப்பெல்லாம் இந்த வாழ்வில் மாத்திரமல்ல என்று சுட்டிக்காண்பிக்கின்றன. நாம் மரித்தபின்பு, நாம் ஆவிக்குரிய வட்டாரத்தில் வாழ்வோம்.*

## புதிய ஏற்பாட்டில் இருந்து உறுதிப்பாடு

*புதிய ஏற்பாடு, மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வைப் போதிக்கிறது. நித்திய ஜீவன் என்பது இயேசுவினுடைய போதனையின் பிரதான ஆய்வுக் கருத்துக்களில் ஒன்றாக இருந்தது (யோவா. 4:36; 6:54; 10:28; 12:25; 17:2, 3), மற்றும் அந்த ஆய்வுக்கருத்து புதிய ஏற்பாடு முழுவதிலும் தொடருகிறது (அப். 13:48; ரோமர் 2:7; 1 தீமோ. 6:12).*

*இயேசுவின் உயிர்த்தெழுதலானது மரணத்திற்குப் பின்புள்ள வாழ்விற்கான நிரூபணத்தை நமக்குத் தருகிறது. அவரது உயிர்த்தெழுதலில் நாம், மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வின் நம்பிக்கையையும் (1 கொரி. 15:13-22), நாம் மீண்டும் வாழ்வோம் என்ற உறுதிப்பாட்டையும்*

*பெறுகின்றோம். அவர், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவா. 11:25) என்றும், "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர் கள்" (யோவா. 14:19) என்றும் உரைத்தார். இயேசு, "மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" (2 தீமோ. 1:10).*

*கிறிஸ்தவர்களுக்கு மரணத்திற்குப் பின்புள்ள வாழ்விற்கான உறுதிப் பாடு என்பது தத்துவம், தர்க்கவியல் அல்லது மீண்டும் வாழ்வதற்கு நமக்குள்ளாக இருக்கும் ஏக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந் திருப்பதில்லை. இவைகள் மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றி, அறிவுக்குப் பொருத்தமாகத் தோன்றுகிற சில காரணங்களைத் தரலாம், ஆனால் இவைகள் நிரூபணமாக இருப்பதில்லை. கிறிஸ்தவர்களுக்குள்ள உறுதிப் பாடு பல சத்தியங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது:*

*தேவன் இந்த அண்டத்தைப் படைத்தவராக இருக்கின்றார்.*

*தேவன் இல்லையென்றால், "ஏதோ ஓரிடத்தில் உள்ள சக்தியானது" மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வைத் தர இயலாது. சர்வ வல்லமை நிறைந்தவரான நமது தேவன் இருக்கின்றார், நாம் மரித்த பின்பு அவர் நமக்கு வாழ்வளிக்கக்கூடியவராக இருக்கின்றார் (அப். 26:8).*

*தேவனுடைய குமாரனாகிய இயேசு மேசியாவாக இருக்கின்றார்.*

*இயேசுவே வழியாக, சத்தியமாக மற்றும் ஜீவனாக இருக்கின்றார் (யோவா. 14:6). மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வைப் பற்றி அவர் கூறியது சத்தியமாக உள்ளது, ஏனெனில் அவர் சத்தியத்தையே பேசினார் (யோவா. 18:37). அவரது போதனையில் நாம் சத்தியத்தைக் கண்டறிகின்றோம் (யோவா. 8:40); அவரது வல்லமையில் நாம் உறுதிப்பாட்டைக் கண்டறிகின்றோம் (யோவா. 11:25, 26); அவரது உயிர்த்தெழுதலில் நாம் நம்பிக்கையைப் பெற்றுள்ளோம் (1 கொரி. 15:20-22); மற்றும் அவரது ஜீவனில் நாம் ஜீவனைப் பெறுகின்றோம் (யோவா. 14:19).*

*வேதாகமம் தேவனுடைய வசனமாக உள்ளது.*

*வேதாகமத்தை எழுதியவர்களைத் தேவனுடைய தெய்வீகக் கரமே இயக்கிற்று என்பதை ஆதாரம் நிரூபிக்கிறது (2 தீமோ. 3:16), இது, மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வு பற்றி, அந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கூற்றும் உண்மையானது என்று அர்த்தப்படுத்துகிறது.*

*புதிய ஏற்பாட்டை எழுதியவர்களின் சாட்சியம் உண்மையானதாக உள்ளது.*

*உயிர்த்தெழுந்து மீண்டும் வாழும் கிறிஸ்துவைக் கண்டதாக அவர்கள்*

*யாவரும் எவ்வித விதிவிலக்குமின்றி உறுதிப்படுத்தினர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் சாட்சியத்தின் உறுதிப்பாட்டை தங்கள் இரத்தத்தைக்கொண்டு எழுதினர்; ஏனெனில் மரணத்தினால் அச்சுறுத்தப் பட்டபோது, அவர்கள் அவரது உயிர்த்தெழுதலுக்குத் தங்கள் சாட்சியத்தை அளித்தனர் (அப். 5:29-31).*

தேவன் இருக்கின்றார், வேதாகமம் அவரது வார்த்தையாக உள்ளது, *புதிய ஏற்பாடு நம்பத்தகுந்த சாட்சியங்களைக் கொண்டுள்ளது, இயேசுவே கிறிஸ்துவாக இருக்கின்றார் என்பவற்றிற்குள்ள திரளான சாட்சியங்களின் அடிப்படையில் தமது விசுவாசம் அமைந்துள்ளது. நாம், மரணம் உடலைக் களவாடி, நாம் மரித்தாலும் இன்னமும் உயிர் வாழ்வோம் என்ற இந்த சாட்சியத்தின்மீது நமது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைக்கின் றோம்.*

## *முடிவுரை*

*மரணத்திற்குப் பின்புள்ள வாழ்வு பற்றிய நமது இருதயங்களின் ஏக்கத்திற்குத் தெய்வீக வெளிப்படுத்துதலினால் உறுதிப்பாடு அளிக்கப் பட்டுள்ளது. நாம் மரித்த பின்பு உயிர் வாழ்வோம் என்பதை நம்மால் நிரூபிக்கவோ அல்லது பரிசோதனையின் மூலம் செயல்விளக்கப்படுத்தவோ முடியாது. மரித்தவர்கள் இருக்கும் வட்டாரம் பற்றி நமக்குச் சாட்சியம் அளிக்க எவரொருவரும் அங்கிருந்து திரும்பி வந்திருக்கவில்லை. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் தேவனுடைய வெளிப்படுத்துதல், விசேஷமாக இயேசு கிறிஸ்துவின் மூலம் வந்துள்ள வெளிப்படுத்துதல் ஆகியவை தாம் மரணத்திற்குப் பின்புள்ள வாழ்விற்கான நமது உறுதிப் பாட்டின் அடிப்படையாக உள்ளது. மரணம் என்ற நிகழ்ச்சி வழியே கடந்து செல்லுகையில், நாம் இல்லாதொழிதலில் அல்ல ஆனால் ஜீவனுக்குள் கடந்து செல்லுவோம் என்பதை அறிய முடியும்.*

## பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள உயிர்த்தெழுதல்கள்

| | |
|---|---|
| *1 இரா. 17:20-23* | *சரெப்தா ஊர் விதவையின் மகன் எலியாவினால் உயிர்ப்பிக்கப்பட்டான்.* |
| *2 இரா. 4:32-37* | *சூனேமித்தியப் பெண்ணின் மகன் எலிசாவினால் உயிர்ப்பிக்கப்பட்டான்.* |
| *2 இரா. 13:21* | *மோவாபியரால் எலிசாவின் கல்லறையில் புதைக்கப்பட்ட மனிதன் தீர்க்கதரிசியின் எலும்புகளைத் தொட்டு திரும்பவும் உயிர் பெற்றான்.* |
| *மத். 9:18-25* | *ஜெப ஆலயத் தலைவரான யவீருவின் மகள் இயேசுவினால் உயிர்ப்பிக்கப்பட்டாள்.* |
| *மத். 27:52, 53* | *இயேசுவின் மரணத்தின்போது பல பரிசுத்தவான்கள் தேவனால் உயிர்ப்பிக்கப்பட்டனர்.* |
| *மத். 28:1-9* | *இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார்.* |
| *லூக். 7:11-17* | *நாயீன் ஊர் விதவையின் மகன் இயேசுவினால் உயிர்ப்பிக்கப்பட்டான்.* |
| *யோவா. 11:23-44* | *லாசரு இயேசுவினால் உயிர்ப்பிக்கப்பட்டார்.* |
| *அப். 9:36-41* | *தொற்காள் பேதுருவினால் உயிர்ப்பிக்கப்பட்டாள்.* |
| *அப். 20:9-12* | *ஐத்திகு பவுலினால் உயிர்ப்பிக்கப்பட்டான்.* |